# யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

## பரிசில் நாள் அறிக்கை - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

## பரிசில் நாள் - 2018

**காலம் : 04.10.2018 வியாழக்கிழமை**

**நேரம் : பி.ப 2.00மணி**

**இடம் : வித்தியாலய ஞானம் அரங்கு**

**தலைவர்**
**திரு ப.தர்மபூபதி அவர்கள்**
(வித்தியாலய முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
**கௌரவ கேசவன் சயந்தன் அவர்கள்**
(வடமாகாண சபை உறுப்பினர் - சட்டத்தரணி)

**சிறப்பு விருந்தினர்**
**திரு அருமைத்துரை பிறேமதாஸ் அவர்கள்**
(பிரதிக்கல்விப்பணிப்பாளர் - கல்விமுகாமைத்துவம்,
வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி)

**கௌரவ விருந்தினர்**
**திரு நடராசா இராசவிசாகன் அவர்கள்**
(பழைய மாணவன்,
பிரதிப் பதிவாளர் - யாழ் பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

"சமாதானமே வாழ்வு"

## தூர நோக்கு

"நவீன கல்விச் சிந்தனைகள், மாற்றங்கள் கொண்ட தரமான கல்வியினூடாக வாழ்க்கையும் தரமான சமூகமும் உருவாகும்"

## நோக்கக் கூற்று

"அரிதாகக் கிடைக்கின்ற கல்வி வளங்களை சிறந்த முகாமையினூடாக, உச்சப்பயன்பெற்று நல்லொழுக்கம் சார்ந்த தேர்ச்சிகளையுடைய தரமான கல்வியை வழங்குவதன் மூலம் தரமான சமூகத்தை உருவாக்கல்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

1) விருந்தினரை வரவேற்றல்
2) தேசிய கொடியேற்றல்
3) தேசிய கீதம் இசைத்தல்
4) பாடசாலைக்கொடியேற்றல்
5) பாடசாலைக் கீதம் இசைத்தல்
6) மங்களவிளக்கேற்றல்
7) இறைவணக்கம்
8) வரவேற்பு நடனம்
9) வரவேற்புரை
10) பரிசில் நாள் அறிக்கை
11) பரிசில் வழங்கல்
12) கலைநிகழ்வுகள்
    1. English song - Secondary
    2. காவடியாட்டம்
    3. கிராமிய அபிநயப்பாடல்
    4. கௌரவ விருந்தினர் உரை
    5. பாம்பு நடனம்
    6. English Song - Primary
    7. இசை (குழு)
    8. சிறப்பு விருந்தினர் உரை
    9. English Role play
    10. பிரதம விருந்தினர் உரை
    11. நாடகம் "போதையே விலகிவிடு"
11) நன்றியுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை

இன்றைய பரிசில்நாள் நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதிப்பார்ந்த விருந்தினர்கள் வரிசையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் **கௌரவ கேசவன் சயந்தன்** அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள தென்மராட்சிக் கல்வி வலய கல்வி முகாமைத்துவத்திற்கு பொறுப்பு வகிக்கும் **உயர்திரு அ.பிறேமதாஸ்** அவர்களே!

கௌரவ விருந்தினராக கலந்து எம்மை மகிழ்வில் ஆழ்த்தியிருக்கும் யாழ் பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் **உயர்திரு ந.இராசவிசாகன்** அவர்களே!

இவ்விழாவிற்கு வருகை தந்து சபையை மேன்மைப்படுத்திக் கொண்டிருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! ஓய்வுநிலை அதிபர்களே! ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திக் குழுவினரே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! அன்பான மாணவச் செல்வங்களே! தங்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்பதுடன் அனைவருக்கும் எனது மாலை வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மை விருந்தினர் கௌரவ கேசவன் சயந்தன் அவர்களே!**

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலே ஆரம்பக் கல்வி கற்று யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வி கற்ற தாங்கள் அதன்பின் தென்மராட்சிக் கல்வி வலய யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராக அர்ப்பணிப்பு மிக்க சேவை புரிந்தீர்கள். தொடர்ச்சியாக பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டு விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி கொழும்புக்கு இடமாற்றம் பெற்று கடமை புரிந்தீர்கள். கொழும்பு பல்கலைக்கழக சட்டமாணியாய் மிளிர்ந்தீர்கள்.

மும்மொழிப் புலமை வாய்ந்த தாங்கள் சட்டத்தரணியாய் மக்கள் குறை தீர்த்து வருவதை நாம் அறிவோம். இன்று கௌரவ வடமாகாணசபை உறுப்பினராய் வடமாகாண ரீதியான கல்வி அபிவிருத்திக்கு என்றுமே உதவிக்கரம் நீட்டும் தங்களை இப்பாடசாலைச் சமூகம் வரவேற்று நிற்கின்றது. பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் தங்கள் மனித நேயம் மிக்க சேவையை பாராட்டுவதோடு தங்களை வருக வருக என வரவேற்கின்றேன்.

**சிறப்பு விருந்தினர் தென்மராட்சிக் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் உயர்திரு அ.பிறேமதாஸ் அவர்களே!**

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாகிய தாங்கள் தொடர்ந்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியினையும் பின்னர் தேசிய கல்வி நிறுவகத்தில் முதுகல்விமாணிப் பட்டத்தினையும் பெற்று வாண்மை விருத்திக்கு அணி சேர்த்துள்ளீர்கள். 2005ம் ஆண்டில் ஆசிரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்காக யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் அடியெடுத்து வைத்த தாங்கள் 2012ம் ஆண்டு வரை உன்னத பணியாற்றி பின்னர் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு மாற்றலாகி 2015வரை மகத்தான பணியாற்றி தங்கள் சேவைக்கு வளமூட்டினீர்கள்.

2015இல் யா/மகாஜனாக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று அக்கல்லூரியிலேயே பிரதி அதிபராக மகத்தான பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இலங்கை கல்வி நிர்வாக சேவை (பொது ஆளணி) பரீட்சையில் சித்தியடைந்து தென்மராட்சிக் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று மிகச்சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். தாங்கள் வகித்த ஒவ்வொரு சேவையினூடாகவும் பெற்ற அனுபவங்களின் ஊடாகவும் எமக்கு பல வழிகாட்டல்களை மேற்கொள்கின்றீர்கள். வெளிவாரி மதிப்பீடுகள், கருத்தரங்குகள் ஊடாக எம்மை வழிகாட்டி வருவதால் எமது பாடசாலைப் பண்புசார் செயற்பாடுகளில் விருத்தியடைய வாய்ப்புள்ளது. எங்கள் கல்விச் சமூகம் தங்களை வரவேற்பதில் மகிழ்வடைகின்றது.

**கௌரவ விருந்தினர் யாழ் பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர் உயர்திரு ந.இராசவிசாகன் அவர்களே!**

இவ்வித்தியாலயத்திலேயே ஆரம்பக் கல்வி கற்று தொடர்ந்து இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பயின்று கற்றலின் விளைதிறனாக யாழ் பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான மாணிப்பட்டம் பெற்று விரிவுரையாளராய் சேவை ஆற்றியும், கொழும்பு, றுகுணு பல்கலைக்கழகங்களில் உதவிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளராகவும், பதவி உயர்வு பெற்று இன்று யாழ் பல்கலைக் கழகத்தில் பிரதிப் பதிவாளராக அரும்பணி புரிந்து வருகிறீர்கள். இப்பெருமைக்குரிய பழைய மாணவரான தங்களைப் பாடசாலைச் சமூகம் பெருமனதுடன் வரவேற்கின்றது. தங்களை வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர்களே! உதவிக்கல்விப் பணிப்பாளர்களே! கோட்டக்கல்வி பணிப்பாளரே! ஆசிரிய ஆலோசகர்களே! மற்றும் உத்தியோகத்தர்களே! எமது வித்தியாலயத்தின் தேவையறிந்து காலம் கருதிய உதவிகள் நல்கி வரும் தங்களை உளமகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன் விரும்பிகளே! எமது பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலே பக்கபலமாக செயலாற்றி வரும் தங்களையும் வருக வருக என உளமார வரவேற்கின்றேன்.

எமது அழைப்பிற்கு இணங்கி வருகை தந்த அனைவரையும் வரவேற்று பாடசாலைப் பரிசில்நாள் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

**திரு ப. தர்மபூபதி**
**பாடசாலை முதல்வர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் விபரம்

| | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ |
| ஆரம்பப் பிரிவு | 28 | 24 | 52 | 28 | 21 | 49 | 29 | 21 | 50 |
| இடை நிலைப் பிரிவு | 40 | 25 | 65 | 33 | 25 | 58 | 30 | 24 | 54 |
| மொத்தம் | 68 | 49 | 117 | 61 | 46 | 107 | 59 | 45 | 104 |

## ஆளணி விபரம்

| வகை | 2018 |
|---|---|
| அதிபர் | 01 |
| பட்டதாரிகள் | 10 |
| பயிற்றப்பட்டவர்கள் | 06 |
| கற்பித்தலில் தேசிய டிப்ளோமா | 05 |
| கல்வி சாரா ஊழியர்கள் | 01 |

1. MR. P. Tharmapoopathy - B.Ed,Dip In Ed, SLPS 2
2. MR. R. Subramaniam -B.A (Hons) PGDE, M.A,M.Ed
3. MRS. K. Elampirainathan - G.C.E A/L, N.D.in Teaching
4. MRS. V. Sivakumar - N.D in Teaching (Hindisium), B.E.D
5. MRS. K. Varatharajan - B.F.A (Dance), PGDE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 6. MRS. M. Elankumaran | - N.D in Teaching (Science), B.Ed |
| 7. MRS. R. Thanabalasingam | - G.C.E. A/L, Trained (Agriculture) |
| 8. MRS. S. Asokan | - Trained (maths), B.A, Dip. In . Ed |
| 9. MRS. M. Amirthalingam | - G.C.E A/L, Trained (primary) |
| 10. MRS. S. Raviraj | - B.A (Hons), PGDE |
| 11. MRS. K. Sivakaran | - B.A (Hons), PGDE |
| 12. MRS. P. Pushpakanthan | - G.C. E A/L, N. D. in Teaching (Primary) |
| 13. MRS. V. Elankumaran | - (Special Trained - (English), B.A |
| 14. MRS. J.Nanthakumar | - G.C.E A/L,Trained (primary) |
| 15. MRS.T. Lokendran | - G.C.E A/L, Hindusium Special Trained |
| 16. MR. S.Gnanendran | - B.F.A (Art) |
| 17. MRS. S. Sivaloganathan | - B.F.A (Music) |
| 18. MRS. R. Rameswaran | - G.C.E A/L, Trained (primary) |
| 19. MRS. K. Kokulan | - B.A (Hons) PGDE |
| 20. MRS. P. Premavashan | - G.C.E A/L Trained Aquatic Bio Resourse |
| 21. MISS. M.Abirami | - B.A (Hons) |
| 22. MRS. T. Suresh | - G.C.E A/L, ND.in.Teaching (Science) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | இடமாற்றம் பெற்று வந்தோர் |
|---|---|
| 2014 | திரு. சி.ஞானபாஸ்கரன் (காவலாளி)<br>திருமதி. ஷ.அசோகன் |
| 2015 | திரு.ப. தர்மபூபதி (அதிபர்)<br>திருமதி. கு.சிவகரன்<br>திருமதி. மா.அமிர்தலிங்கம்<br>திருமதி. ச. ரவிராஜ்<br>திருமதி.ர.ஸ்ரீபாலகிருஷ்ணன்<br>திருமதி. த.அலெக்சாண்டர்<br>திருமதி.க. வரதராஜன் |
| 2016 | திருமதி.சு.ராமேஷ்<br>திரு. த.சசிகரன் |
| 2017 | திருமதி. வா. இளங்குமரன்<br>திருமதி. சு. புஸ்பகாந்தன்<br>திரு. இ. சுப்பிரமணியம் (உப அதிபர்) |
| 2018 | திருமதி.தே.லோகேந்திரன்<br>திருமதி.ஜெ. நந்தகுமார்<br>திரு. சி.ஞானேந்திரன்<br>திருமதி. சா.சிவலோகநாதன்<br>திருமதி. கே. கோகுலன்<br>திருமதி. பி. பிறேமவாசன்<br>திருமதி. ர. ராமேஸ்வரன்<br>செல்வி. மோ. அபிராமி<br>திருமதி து.சுரேஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடமாற்றம் பெற்றுச் சென்றோர் | ஓய்வுநிலை பெற்றவர்கள் |
|---|---|
| திருமதி. ஜெ.பாலச்சந்திரன்<br>திரு. கா. குணசிங்கம் (அதிபர்)<br>திருமதி. சி. ஞானபாஸ்கரன் (காவலாளி) | |
| திருமதி த.கனகரத்தினம்<br>திருமதி. சி.ஸ்ரீரங்கன்<br>திருமதி. த.அலெக்சாண்டர் | திருமதி ச.நவரட்ணராஜா |
| திருமதி கௌ.மகிந்தன்<br>திருமதி.சு.ராமேஷ் | திருமதி .இ.திருஞான - சம்பந்தமூர்த்தி (உபஅதிபர்) |
| | திருமதி.வி. குலசிங்கம் |
| திரு.த. சசிகரன்<br>திருமதி.சி.சுபாஸ்கரன்<br>திருமதி. உ. தவத்துரை<br>திருமதி.ர. ஸ்ரீபாலகிருஸ்ணன் | செல்வி.பொ.தங்கேஸ்வரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சைப் பெறுபேறு

### தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 70 புள்ளிகளுக்கு மேற் பெற்ற மாணவர் விபரம்

| ஆண்டு | பெயர் | பெ.புள்ளிகள் | சித்தி |
|---|---|---|---|
| 2015 | ஜெ. லக்ஷன் | 150 | |
| | ற. கீர்த்தனன் | 117 | |
| | அ. ராஜ்குமார் | 109 | |
| | க. விரிசாளினி | 108 | |
| | ஜே. ஜெனார்த்தனன் | 100 | |
| | நா. சம்சிகா | 100 | |
| | செ. கதீசன் | 87 | |
| 2016 | உ. கிருஷாந் | 141 | |
| | ச. சஜீபா | 132 | |
| | சு. லிதுர்ஷனா | 126 | |
| | ச. சாருயன் | 119 | |
| | வ. யதுசன் | 95 | |
| | த. சுதாகரன் | 91 | |
| | பு. றஜிதரன் | 86 | |
| | வி. யோபினா | 85 | |
| | ச. யதுசா | 84 | |
| 2017 | **வி. துவாரகி** | **161** | **161** |
| | சி. நிதுசன் | 138 | |
| | பா. அஷ்விதா | 134 | |
| | பா. சியானுகா | 109 | |
| | ம. டினுசன் | 107 | |
| | அ. அபிநயன் | 103 | |
| | ந. டினுராஜ் | 98 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை
## (உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் விபரம்)

| ஆண்டு | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| தோற்றியோர் | 11 | 09 | 12 |
| தகைமைபெற்றோர் | 03 | 03 | 06 |
| சித்தி வீதம் | 27% | 33% | 50% |

## க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 2014 | ஜெ.மேரிறுவீனா | - 3A, 2B, 2C, 2S, |
| | செ.கிருஷா | - 1A, 3B, 3C, 2S |
| | சு.டயானா | - 1A, 1B, 2C, 2S |
| 2015 | கோ.டினோஜா | - 1A, 5B, 2C, 1S |
| | நா.தனுசா | - 1A, 1B, 1C, 6S |
| | க.மதுசிகா | - 3B, 5C, 1S |
| 2016 | வே.சஜிதன் | - 4A, 3B, 1C |
| | ற.மீரா | - 2A, 3C, 3S |
| | செ.கார்திகா | - 1A, 2B, 2C, 2S |
| 2017 | ச.டனுசாந் | - 8A, 1C |
| | க.ஜினோஜா | - 7A, 1B, 1C |
| | சு.சுலக்சன் | - 7A, 1B, 1S |
| | ச. நிலானி | - 4A, 4B, 1C |
| | யூ.சாளினி | - 3A, 2B, 2C, 2S |
| | லோ.பிறேமிலா | - 2A, 2B, 1C, 3S |
| | இ.கௌசிகன் | - 1A, 1B, 3C, 1S |
| | வி.சிவதர்சன் | - 3B, 2C, 1S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் செயற்பாடுகள்

எமது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் வினைதிறனும், விளைதிறனும், கொண்ட அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களினதும், கற்றலில் ஆர்வமும், முயற்சியும் உள்ள மாணவர்களினதும் பங்களிப்பினால் முன்னேற்றம் கண்டு வருகின்றது. 2015 புலமைப் பரிசில் பரீட்சையில் 100வீத சித்தியை எமது மாணவர் பெற்றிருந்தனர். 2016இல் தரம் 05புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவி துவாரகி விஜயகுமார் 161 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமையீட்டித் தந்துள்ளார். அத்துடன் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 2017ம் ஆண்டு தோற்றிய மாணவர்களில் 6 மாணவர்கள் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. உயர் பெறுபேற்றினைப் பெற்ற மாணவன் ச.டனுசாந், மாணவி க.ஜினோஜா, மாணவன் சு.சுலக்ஷன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். அனைத்து மாணவர்களையும் நெறிப்படுத்திய ஆசிரியர்கட்கு நன்றிகள்.

## இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள்.

எமது வித்தியாலய மாணவர்களின் உடல் உள ஆற்றல்களை வளர்தெடுக்கும் வகையிலும், தலைமைத்துவத் திறன்கள், நன்மனப்பாங்குகள், விழுமியப் பண்புகள், கலைத்திறன்கள், ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் வகையிலும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் பாடசாலையில் நடாத்தப் படுகின்றன. பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வருடந்தோறும் சிறப்பாக நடாத்தப்படுவதோடு, வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட போட்டிகளிலும் கலந்து கொள்கின்றனர். செல்வி. ந.மீரா 2017இல் மாகாண மட்டத்தில் இடம் பெற்ற தடைதாண்டல் போட்டியில் வெற்றி, பெற்று தேசிய மட்டத்திலும் கலந்து சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தினப்போட்டிகள், ஆங்கில தினப்போட்டிகள், கணித, விஞ்ஞானம், சமூக விஞ்ஞானப் போட்டிகள், தகவல் தொடர்பாடல் சார் போட்டிகளில் கலந்து வலயமட்ட சாதனைகளையும் எமது மாணவர்கள் பெற்றிருக்கின்றனர். ஆரம்பப் பிரிவுக்குரிய சகல போட்டிகளின் மூலமும் பல்வகைப்பட்ட திறன்கள் வெளிக் கொணரப்படுகின்றன. இச்செயற்பாடுகளை வளர்த்துச் செல்லும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

## மன்றச் செயற்பாடுகள்

மாணவரது ஆளுமை சார்ந்த பல்வேறு தேர்ச்சிகளையும், வளர்த்தெடுக்கும் நோக்கிலே, ஆரம்ப கனிஷ்ட, இடைநிலைப் பிரிவுகளுக்கென மன்றங்கள் அமைக்கப்பட்டு மாதமிரு முறை மன்றச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. சாரணர் குழு, சூழல் பாதுகாப்புக் கழகம் முதலிய அமைப்புக்களும் செயற்பட்டு வருகின்றன.

## தமிழ் மொழித் திறன்

மாணவர்களின் மொழித்திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மட்டத் தமிழ் மொழித் திறன் போட்டியில் அனைத்து மாணவரும் பங்குபற்றுவதற்கு ஊக்கமளிக்கப் படுகின்றனர். 2015ம் ஆண்டு இடம் பெற்ற வலயமட்ட தமிழ்த் தினப் போட்டியில் க. ஜினோஜா பிரிவு- 2 பாவோதல் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். 2016ல் வி.துவாரகி இசையும் அசைவும் போட்டியில் 1ம் இடத்தினையும், 2017ல் சு.லிதுர்சனா பிரிவு 2ல் பேச்சுப் போட்டியில் வலய மட்டத்தில் மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்டதோடு, தமிழறிவு வினாவிடையில் வலயமட்டத்தில் 2ம் இடத்தினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் பாராளுமன்றம்

மாணவர் பாரளுமன்றம் அமைக்கப்பட்டு அதன் படிமுறைச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## ஆங்கில மொழித் திறன்

மாணவர்களின் ஆங்கில மொழித்திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் வகுப்பு ரீதியாக ஆங்கில மொழித் திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. 2017ம் ஆண்டு ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் வலயமட்டத்தில் ஜெ.லக்ஷன் 3ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சமூக விஞ்ஞானத் துறை

எமது பாடசாலையில் சமூக விஞ்ஞானத் துறை தொடர்பான போட்டிகளில் மாணவர்கள் வருடந்தோறும் கலந்து வருகின்றனர். 2017ல் இடம் பெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் சு.சுலக்ஷன் 3ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை சிறப்பிற்குரியதாகும்.

## விவசாய விஞ்ஞானத்துறை

விவசாய விஞ்ஞானக் குறுவினாப் போட்டியில் எமது மாணவர்கள் வருடந்தோறும் பங்கு பற்றிச் சான்றிதழ் பெற்று வருகின்றனர். 2017ல் இடம் பெற்ற விவசாய குறுவினாவிடைப் போட்டியில் மாகாண மட்டத்தில் ச. டனுசாந் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றமை முக்கிய அம்சமாகும். க.ஜினோசா, சு.சுலக்சன் வலய மட்டத்தில் சிறப்புத் தேர்ச்சிக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித விஞ்ஞானத் துறை

அறிவுசார் உலகுக்கு அவசியமான இக் கணித விஞ்ஞானத் துறை சார் போட்டிகளில் மாணவர் வருடந்தோறும் பங்குபற்றி வருகின்றனர். வலயமட்டத்தில் இடம்பெற்ற கணித உபகரணப் போட்டியில் ச.டனுசாந் முதலாம் இடத்தினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தகவல் தொடர்பாடல்

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உலகிலே கணினிக் கல்வியின் முக்கியத்துவம் பெரிது, பாடசாலை மாணவரின் கணினி அறிவினை மேம்படுத்தும் வகையிலே ஆரம்ப, இடைநிலை, மாணவர்களுக்கு கணினிக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பப் போட்டிகளில் மாணவர் பங்கேற்று வருகின்றனர்.

## ஆரம்பக்கல்வி

ஆரம்பக் கல்வியே மாணவரின் சமநிலை ஆளுமைக்கு அடித்தளமிட்டுக் கொடுப்பதாகும். ஆரம்ப கல்வித்துறையினைப் பொறுத்தவரை மாணவர்கள் செயற்பட்டு மகிழ்ந்து இன்னோரன்ன ஆக்க பூர்வமான போட்டிகளிலும் கலந்து சிறப்பித்து வருகின்றனர். செல்வி ர.தனிக்சிகா வலயமட்ட சித்திர போட்டியில் சிறப்புத் தேர்ச்சியையும், செல்வி ரா.சரண்யா வலயமட்ட விரைவு கணிதப் போட்டியில் சிறப்புத்தேர்ச்சியினையும் பெற்றமை சிறப்புக்குரியது.

## சமயத்துறை

மாணவர்களின் சமயவிழுமியங்களை வளர்த்தெடுக்கும் வகையில் சைவசமயப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. 2015ல் வலய ரீதியாக நடாத்தப்பட்ட சமயக் கண்காட்சிப் போட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் ர.விதுசன் சிறப்புத் தேர்ச்சியினைப் பெற்றுக் கொண்டார். செல்வி க. ஜினோசா 2015ல் வலயமட்டப் பண்ணிசை போட்டியில் சிறப்புத்தேர்ச்சிகுரிய சான்றிதழைப் பெற்றார். 2017ல் செல்வி ச.நிஷானி, செல்வி க. விரிசாளினி, வலயமட்ட கோலம் போடுதல் போட்டியில் சிறப்புத்தேர்ச்சியினைப் பெற்றுக் கொண்டனர். பாடசாலை மாணவர்களுக்கு சமயப் பழக்கவழக்கங்களையும், விழுமியங்களையும், வளர்த்தெடுக்கும் வகையிலே காலை ஆராதனைகளும் நற்சிந்தனைகளும் நிகழ்த்தப்படுகின்றன. சமயகுரவர்களின் குரு பூசைத்தினம், நவராத்திரி விழா என்பனவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. நவராத்திரி தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கோலப்போட்டி, மாலை கட்டல் போட்டி, தேவார மனனப் போட்டிகள் நடாத்தி வாணி விழாவின் போது பரிசில் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றன.

## கற்றல் வள நிலையம்

இன்றைய அறிவுமையப் பொருளாதார யுகத்திலே அறிவுத் தேவையானது தேடல்களையும், சுயகற்றலுக்கான விவேகத்தினையும் நோக்கிய வகையிலே முகிழ் நிலைப்படுத்தப் படுகின்றது. இதன் காரணமாக செயல்திறன் மிக்க நூலகங்களின் பணி அவசியமாகின்றது. அந்த வகையிலே எமது பாடசாலை கற்றல் வளநிலையமும் மாணவரின் வாசிப்பாற்றலை ஊக்குவிப்பதில் பங்காற்றி வருகின்றது.

2015, 2016, 2017களில் கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்தி போட்டிகளில் பங்கு கொண்டு வலயமட்ட சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். 2016ல் வகை2 பாடசாலை நூலகங்களிடையே நடாத்தப்பட்ட நூலகப் போட்டியில் எமது பாடசாலை வலய மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. "நூல்களாகிய தோழர்களே பாசமிகு நண்பர்கள்" எனும் வாசிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய மாணவர் செயல்திறன் குறிப்புக்களை தயாரிப்பதில் ஈடுபடுகின்றனர், தேசிய வாசிப்பு மாதம் செயற்படுத்தப்படுவதுடன் வாசிப்பு முகாம் மூலம் வாசிப்பு ஆர்வம் தூண்டப்படுகின்றது. காலை ஆராதனையின் போது, தினமும் மாணவர்களால் பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் வாசிக்கப் படுகின்றன.

## ஆசிரியர் நலன்புரி

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவப் படுத்தும் அமைப்பாக எமது பாடசாலையின் கல்விசார், கல்விசாரா ஊழியர்களை உள்ளடக்கி ஆசிரிய நலன்புரிக் கழகமானது உறுப்பினர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்வதோடு பாடசாலையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக விளங்குகிறது.

## புலமைப் பரிசில் நிதியம்

செல்லத்துரை புலமைப்பரிசில் நிதியம்
பேரம்பலம் புலமைப்பரிசில் நிதியம்
ஸ்ரீகாந்தா புலமைப்பரிசில் நிதியம்

என்பவற்றின் மூலம் கிடைக்கும் நிதி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றில் உயர் பெறுபேற்றை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு வருடந் தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

## பாடசாலை அபிவிருத்தி

பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில் புதியதொரு அமைப்பாக பாடசாலை அபிவிருத்திக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் அதிபர், ஆசிரியப் பிரதிநிதிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு பாடசாலைக்கான வளங்களையும் சீர்ப்படுத்தி தரம் மிக்கதொரு மாணவ சமுதாயத்தினை உருவாக்குதலே இதன் நோக்கம். இதன் செயற்பாடுகளைப் பாராட்டுகின்றோம். அத்தோடு மாணவர் ஒழுங்கு, கட்டுப்பாடு, கற்றல் மேம்பாடு போன்ற செயற்பாடுகளை மேம்படுத்தி வரும் பாடசாலை முகாமைக்கும் எமது நன்றிகள்.

மேலும் புலம் பெயர் நாடுகளில் வாழும் பழைய மாணவரோடு தொடர்பு கொண்டு இப்பாடசாலையின் கிழக்குப் புற மதில் வேலைத்திட்டம் பூரண நிலையடைய உந்து சக்தியாக இருந்த, இப்பாடசாலை ஆரம்ப ஸ்தாபகர் அமரர் ஆறுமுகம் கனகரத்தினம் அவர்களின் புதல்வியும், இப்பாடசாலை முன்னாள் விஞ்ஞான ஆசிரியையுமான திருமதி சுபந்தினி விஜயகுமார் அவர்களையும் பாராட்டுவதோடு நேரில் நின்று நெறிப்படுத்திய திரு.விஜயகுமார் ஆசிரியர் அவர்களுக்கும், இணைந்து செயலாற்றிய அனைத்துப் பழைய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

## பாடசாலை வளத்தேவைகள்

### 01. வகுப்பறைப் பற்றாக்குறை

தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவருக்கு தனியான வகுப்பறைகள் இன்மை, கற்றல் கற்பித்தலில் பெரும் பிரச்சனை களைத் தோற்றுவிக்கின்றது. இதனால் இவர்களுக்கான புதிய அளவுப் பரிமாணங்களுக்குட்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதி மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. இதற்காக 100'x25' அளவுள்ள இரட்டைமாடிக் கட்டிடமொன்றினை எதிர் பார்க்கின்றோம்.

## நூலகமும் கற்றலுக்கான வளநிலையமும்

தற்காலிகமாக 20'x20' வகுப்பறையை வாசிப்பு அறையாகப் பயன்படுத்தி வருகிறோம். இதைப் பொருத்தமான அளவுத்திட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கும் பட்சத்தில் மாணவர்களின் அறிவியல்சார், அழகியல்சார் திறன்கள் மேம்படும் என நம்புகிறோம்.

## 02. சமையலறை

பகுதியளவில் அமைக்கப்பட்ட சமையலறையைப் பயன்படுத்தி வருகிறோம். பொருத்தமான அளவுத்திட்டத்தில் தரமான சமையலறை ஒன்றை எதிர்பார்க்கின்றோம்.

## 03. அலுவலக அறை

தற்காலிகமான 20'x20' வகுப்பறையினை அலுவலக அறையாகப் பயன்படுத்தி வருகின்றோம். பொருத்தமான அளவுத் திட்டத்தில் தரமான அலுவலகம் ஒன்றினை எதிர்பார்க்கின்றோம்.

## 2015க்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட பௌதிக வளத்தேவைகள்

2015 - MRC திட்டத்தின்கீழ் கட்டடங்களுக்கு கூரை அமைப்பித்தலும், வர்ணம் தீட்டுதலும் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2015 - வகுப்பறைப் பற்றாக்குறையை நீக்குவதற்காக வலயக்கல்விப் பணிமனையின் MRC திட்டத்தின்கீழ் 40'x20' வகுப்பறைத் தொகுதி விஸ்தரிக்கப்பட்டது.

2016 - மாணவர்களுக்கான சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்காக, முன்னாள் சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் அவர்களால் ரூபா 50000 செலவில் புதிய குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது.

2016 - இத்தோடு இணைந்த வகையில் திருமதி சரோஜினி நவரட்ணராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களால் நீர்த்தாங்கி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016 - பிரார்த்தனை மண்டபத்தின் 70'x20' அளவுள்ள கூரைகள் மாற்றி அமைக்கப்பட்டன.

2016 - மலசலகூடம் NSBS திட்டத்தின் கீழ் திருத்தி அமைக்கப்பட்டன.

2016 - பாடசாலையின் காலைக்கூட்ட முற்றத்திற்கு 20லோட் மண் நிரப்பப்பட்டது.

2017 - இப்பாடசாலையின் பழைய மாணவனான இராசையா மதீஸ்வரன் என்பவரால் சகல மாணவர்களுக்கும் காலணிகள் வழங்கப்பட்டன.

2017 - மேலைத்தேய வாத்தியக் கருவிகளை இளைப்பாறிய உப அதிபர் திருமதி இ.திருஞானசம்பந்தமூர்த்தி வழங்கி உதவினார்.

2018 - இதற்குரிய சீருடை மற்றும் பாதணிகளையும் ஸ்ரீ வெற்றிலைக்கடை உரிமையாளரான சிவராசா மற்றும் உதயன் களஞ்சிய உரிமையாளர் உதயகுமார் ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டது.

2018 - பழைய மாணவர்களால், நலன்விரும்பிகளால் பாடசாலையின் 360' நீளமான கிழக்குப் புறமதில் புதிதாக அமைக்கப்பட்டது.
பழைய மாணவர்களான

| | | |
|---|---|---|
| திரு.பாஸ்கரநாதன் U.K | - | 100000.00 |
| திரு.க.பிரபாகரன் U.K | - | 100000.00 |
| திரு.S.ஸ்ரீகாந்தன் Canada | - | 75000.00 |
| திருமதி.அ.ஜானகி U.K | - | 50000.00 |
| திரு குமரகுரு Srilanka | - | 10000.00 |

நிதிப்பற்றாக்குறை காரணமாக பூச்சு வேலைகள் நிறைவுபெறாமல் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 - பாடசாலைக் காலைக் கூட்ட முற்றத்திற்கும், விளையாட்டு மைதானத்திற்குமாக Water Board அனுசரணையுடன் 30 லோட் மண் நிரப்பப்பட்டது.

## நிறைவுரை

இப்பரிசில் நாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து பாடசாலையையும் எம்மையும் பெருமைப்படுத்தியதோடு எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கி மகிழ்விக்க இருக்கும் முதன்மை விருந்தினர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சிறப்பு விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் சிறப்பு விருந்தினர் அவர்களுக்கும், கௌரவ விருந்தினர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையானது 2019ம் ஆண்டு அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து வைரவிழாக் காண உள்ளது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட அன்று முதல் இன்று வரை பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகிறேன். பாடசாலை வளர்ச்சிக்காக செயலாற்றிவரும் பாடசாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள், நலன்விரும்பிகள் , பழையமாணவர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

மேலும் கல்விப்புலம் சிறக்க பற்றுடனும் கடமையுணர்வுடனும் சேவையாற்றி சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி வரும் பிரதி அதிபர், என்னோடு தோளோடு தோள் நின்று உதவும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். எமது அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கும் உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

திரு ப.தர்மபூபதி
(பாடசாலை முதல்வர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறுவோர் விபரம்

## 2017 – தரம் – 01

1. கி. நிசாந்தன் - பொதுத்தேர்ச்சி
2. சா. கபிலன் - பொதுத்தேர்ச்சி
3. அ. அபிசன் - பொதுத்தேர்ச்சி
4. லோ. மிதுசன் - பொதுத்தேர்ச்சி
5. சு. சாரங்கன் - பொதுத்தேர்ச்சி
6. பா. சசிதரன் - பொதுத்தேர்ச்சி
7. ஆ. ரிசாலினி - பொதுத்தேர்ச்சி

## தரம் – 02

1. சு. அகிலன் - பொதுத்தேர்ச்சி
2. தே. கனூஜன் - பொதுத்தேர்ச்சி
3. தே. கிசாந் - பொதுத்தேர்ச்சி
4. வி.தக்சன் - பொதுத்தேர்ச்சி
5. அ. தேனுஜன் - பொதுத்தேர்ச்சி
6. ற. லக்சிகன் - பொதுத்தேர்ச்சி
7. வி.குருபரன் - பொதுத்தேர்ச்சி
8. சு. வினோஜன் - பொதுத்தேர்ச்சி
9. உ. தர்சிகா - பொதுத்தேர்ச்சி
10. சு.ரதுஜா - பொதுத்தேர்ச்சி
11. நா. லக்சிகா - பொதுத்தேர்ச்சி
12. நா.அனோஜன் - பொதுத்தேர்ச்சி

## தரம் – 03

1. ர. தனிக்சிகா - தமிழ், சமயம், கணி, சுற்றாடல், ஆங்கிலம்
2. செ. சுரேகா - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல்
3. ர. சரணியா - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் – 04

1. த. தர்மின் - தமிழ், சமயம்
2. வ. ரேணுகா - தமிழ்
3. ஜெ. லக்சிகா - தமிழ், சமயம்
4. செ. கதுஷா - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல்
5. ச. அபிராமி - தமிழ், சமயம், ஆங்கிலம்
6. க. கர்ணிகா - தமிழ், சமயம்

## தரம் – 05

1. வி. துவாரகி - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல்,
   - ஆங்கிலம்
2. பா. சியானுகா - தமிழ், சமயம், சுற்றாடல்
3. பா. அஸ்விதா - தமிழ், சமயம், சுற்றாடல், கணிதம்

## தரம் – 06

1. ச. சஜீவா - சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம்,
   - விஞ்ஞானம், சங்கீதம்
2. உ. கிருஷாந் - தமிழ், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம்
3. சு.லிதுர்சனா - தமிழ், வரலாறு, புவியியல், சுகாதாரம்,
   - நடனம், குடியியல்

## தரம் – 07

1. அ.ராஜ்குமார் - விஞ்ஞானம், குடியியல், சங்கீதம்,
2. ஜெ.லக்ஷன் - தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், குடியியல்,
   - சங்கீதம்
3. நா.சம்சிகா - சமயம், தமிழ், விஞ்ஞானம், நடனம்
4. க.விரிசாளினி - சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம்,
   - வரலாறு, புவியியல், சுகாதாரம், சங்கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் – 08

1. ந.மேனுஜா - சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம்,
   - வரலாறு, விஞ்ஞானம், நடனம்
2. ஜெ.தாட்சாயினி - கணிதம், புவியியல், சுகாதாரம்
3. வ.மதுசன் - சங்கீதம்

## தரம் – 09

1. ச.நிஷானி - சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம்,
   - புவியியல், சங்கீதம், சுகாதாரம்
2. சி.தினேசா - சமயம், தமிழ், நடனம்
3. இ.மதுஷா - குடியியல், சுகாதாரம், சமயம், சங்கீதம்
4. செ.காஞ்சனா - தமிழ், வரலாறு

## தரம் – 10

1. க.நிதுசா - சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு,
   - புவியியல், சங்கீதம், விவசாயம்
2. கு.குமணன் - கணிதம், விஞ்ஞானம், விவசாயம்
3. பு.பூமிகா - நடனம்

## தரம் – 11

1. ச.டனுசாந் - சமயம், தமிழ், கணிதம், புவியியல்,
   - சங்கீதம், விவசாயம்
2. சு.சுலக்ஷன் - சமயம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு,
   - புவியியல், சங்கீதம்
3. க.ஜினோஜா - சமயம், தமிழ், ஆங்கிலம், புவியியல்,
   - சங்கீதம்
4. ச.நிலானி - புவியியல், சமயம், சங்கீதம்
5. யூ.சாளினி - புவியியல், சமயம், நடனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் - 2017

1. ச. டனுசாந்
2. க. ஜினோஜா
3. சு. சுலக்சன்
4. ச. நிலானி
5. யூ. சாளினி
6. லோ. பிறேமிலா

## புலமைப்பரிசில் பரீட்சை - 2017

1. வி. துவாரகி - 161
2. சி. நிதுசன் - 138
3. பா.அஷ்விதா - 134
4. பா. சியானுகா - 109
5. ம. டினுசன் - 107
6. அ. அபிநயன் - 103
7. ந. டினுராஜ் - 98
8. உ. பிரதீஸ் - 92
9. தி. சந்தோஸ் - 76
10. லோ தமிழினி - 74

## இணைபாடவிதான சாதனையாளர் - 2015, 2016, 2017

1. வி. சிவதர்சன் - 2015 - 100M, 200M - 3ம் இடம் (வலயமட்டம்)
400M - 2ம் இடம் (வலயமட்டம்)
2016 - 200M - 2ம் இடம் (வலய மட்டம்)
2017-100M - 3ம் இடம், 400M - 2ம் இடம்
(வலய மட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ர.மீரா	2015 - 400M - 2ம் இடம் (வலயம்)
2016 - 400M தடைதாண்டல் - 1ம் இடம் (வலய மட்டம்)
110M தடைதாண்டல் - 2ம் இடம் (வலயமட்டம்) 2017 -110M தடைதாண்டல் -2ம் இடம் (வலயமட்டம்) 400M தடை தாண்டல் - 4ம் இடம் (மாகாண.மட்டம்)

3. க.ஜினோஜா- 2015 - தமிழ்த்தினப்போட்டி, பாவோதல் பிரிவு - 2, 2ம் இடம் (வலயம்)
பண்ணிசைப் போட்டி, சிறப்புத்தேர்ச்சி (வலயம்) 2016 - விவசாய குறுவினாப் போட்டி (சிறப்புத்தேர்ச்சி)
2017 - கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - சுவரொட்டி

4. ர.விதுசன் 2015 - சமயக் கண்காட்சி ( சிறப்புத் தேர்ச்சி)

5. ஜெ.தட்சாயினி - 2016 - 100M ஓட்டம், 200M ஓட்டம் 2ம் இடம் (வலய மட்டம்)

6. சு.கிருஷா - 2015 - 100M 200M 2ம் இடம் (வலயமட்டம்)

7. வி.துவாரகி - 2016 - தமிழ்த்தினப்போட்டி (இசையும் அசையும்) 1ம் இடம் (வலயமட்டம்)
2017 - கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி (கட்டுரை, சித்திரம்)

8. ச.நிஷானி - 2017 - கோலம் போடுதல் - சிறப்புத்தேர்ச்சி (வலயமட்டம்) கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப்போட்டி- கவிதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. க. விரிசாளினி - 2017 - கோலம் போடுதல் சிறப்புத்தேர்ச்சி (வலயமட்டம்) கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்தி போட்டி கவிதை

10. சு. லிதுர்ஷனா - 2017 - தமிழ்த்தினப் போட்டி - பேச்சு 3ம் இடம் (வலயம்) கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - கட்டுரை

11. சு.சுலக்சன் - 2017- தமிழ்த்தினப் போட்டி,
தமிழறிவு வினாவிடை- 2ம் இடம் (வலயமட்டம்)
சமூக விஞ்ஞானப் போட்டி -
3ம் இடம் வலய மட்டம்
விவசாய குறுவினாப் போட்டி -
சிறப்புத் தேர்ச்சி வலயமட்டம்

12. யூ.சாலினி - 2017 தமிழ்த்தினப்போட்டி - தமிழறிவு வினாவிடை - 2ம் இடம் (வலயமட்டம்)

13. ச.நிலானி - 2017 தமிழ்த்தினப்போட்டி - தமிழறிவு வினாவிடை - 2ம் இடம் வலயமட்டம்

14. கு.குமணன் - 2017 தமிழ்த்தினப்போட்டி - தமிழறிவு வினாவிடை - 2ம் இடம் வலயமட்டம்

15. க.நிதுசா - 2017 தமிழ்த்தினப்போட்டி - தமிழறிவு வினாவிடை - 2ம் இடம் வலயமட்டம் கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - கவிதை

16. ர.சரணியா - 2017 விரைவு கணிதப் போட்டி - சிறப்புத் தேர்ச்சி - வலய மட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ர.தனிக்சிகா 2017 சித்திரம் சிறப்புத் தேர்ச்சி (வலய மட்டம்) கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - கதை கூறல்

18. ஜெ.லக்சன் - 2017 ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டி - 3ம் இடம் (வலயமட்டம்)

19. ச.டனுசாந் - 2017 கணித உபகரணப் போட்டி - 1ம் இடம் (வலய மட்டம்), விவசாய குறுவினாப் போட்டி 4ம் இடம் (வலய மட்டம்), மாகாணமட்டம் - சிறப்புத் தேர்ச்சி

20. உ.தர்சிகா 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - சித்திரம்

21. வி.குருபரன் 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - கதை கூறல்

22. க.ஹர்ணியா 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - வாசிப்பு

23. செ. கதுசா 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - சித்திரம்

24. பா. சியானுகா 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - வாசிப்பு

25. ச. சஜீவா 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - கழிவுப் பொருளாக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. உ. சுரேக்கா — 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - கட்டுரை

27. சி. தினேசா — 2017 கற்றல் வள நிலைய மாணவர் திறன் விருத்திப் போட்டி - சித்திரம்

## வரவொழுங்கு - 2018

### ஆரம்பப்பிரிவு :

1. ஜெ. டிலக்சனா - தரம் 5
2. நா. லபேசன் - தரம் 5
3. செ. கதுசா - தரம் 5
4. க. ஹர்ணியா - தரம் 5
5. வ. ரேணுஜா - தரம் 5
6. ர. மதுசனா - தரம் 5

### இடைநிலைப் பிரிவு :

1. கு. குமணன் தரம் 11
2. ச. நிஷானி தரம் 10
3. இ. மதுசா தரம் 10
4. ஜெ. தட்சாயினி தரம் 09
5. ஐ. தினேகன் தரம் 09
6. ச. சஜீபா தரம் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பட்டு மகிழ்வோம் - 2017, கோட்ட மட்டம், 01ம் இடம் பெற்ற மாணவர்கள்

1. யூ. யாழினி
2. வ. ரேணுஜா
3. செ. கதுஷா
4. நா. லக்ஷனா
5. ஜெ. டிலக்ஷனா
6. ச. டயாழினி
7. நா. லபேசன்
8. சா. பாருஜன்
9. க. தர்மின்
10. ச. சன்சயன்
11. ச. சாருஜன்
12. கி. ஜிவிந்தன்

## நன்றிகள்

யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய பரிசளிப்பு விழாவிற்கான அனைத்து செலவினங்களுக்குமான நிதியுதவியை வழங்கிய பாடசாலையின் பழைய மாணவியும், ஆசிரியையும் தற்போது இலண்டனில் வசித்து வருபவருமாகிய திருமதி ஜானகி அலெக்ஸ் குடும்பத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

இராகம் : ஹம்சத்வனி தாளம் : ஆதி



## பல்லவி

வாழ்க வளப்பொடு வாழியவே - யாழ்
கொடிகாமம் அரசினர் மா வித்தியாலயமே

## அனுபல்லவி

சூழ்தரு மருதமும் முல்லையும் துன்னும்
சுடரொளி தொல் புகழ் தூய கழக மிதே (வாழ்க)

## சரணம்

சீரிய சமயம் செந்தமிழ் ஆங்கிலம்
தேடுறு கணித விஞ்ஞானம் தேகநலவியல்
பாரிய சமூகவியல் அழகியல் தொழில்நுட்பம்
சேர்ந்துமே உலகினில் புகழுடன் மிளிர்வோம். (வாழ்க)

எண்ணிய கருமம் நுண்ணதில் முடித்திடும்
கண்ணியம் மிக்க அதிபர் ஆசிரியர்கள்
கண்ணெனக் கல்வியை கடைந்தெடுத்தூட்டியே
புண்ணியம் பயன் பெற வைத்திடுவாரே (வாழ்க)

பண்டிதர் நாவலர் புலவர் எனப் புகழ்
கொண்டுமே விளங்கிடும் இல்லங்கள் தாமே
பண்புடன் பயன்மிக ஆற்றிடும் சேவையே
எண்டிசை போற்றிட இனிது வாழ்வோமே (வாழ்க)

தாய் தந்தை ஆசிரியர் தரமிகு கல்வியின்
வாய்மைகொள் பணிப்பாளர் யாவரையுமே
சேய்களாய் நாமுமே போற்றுதல் கடனே
ஆயகலை ஓங்கிட வாழ்க பல்லாண்டே (வாழ்க)

Print@Sivakajan press - Kodikamam 0212050303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org